
பிரதான தலைமைச் செய்தி, பிப்ருவரி 2017

**தலைவர் தாமஸ் எஸ். மான்சன்**



# “நான் உங்களில் அன்பாயிருந்ததைப்போல”

சில ஆண்டுகளுக்கும் முன் என்னுடைய நண்பர் லூயிஸ், அவருடைய அன்பான, அடக்கமாக பேசக்கூடிய அவருடைய தாயைப்பற்றிய மென்மையான விவரத்தை என்னிடம் கூறினார்.

அவர் மரித்தபோது, அவருடைய மகன்களுக்கும் மகள்களுக்கும் எந்த சொத்துக்களையோ பணத்தையோ விட்டுச் செல்லவில்லை, ஆனால் எடுத்துக்காட்டிலும், தியாகத்திலும், கீழ்ப்படிதலிலும் ஒரு மரபின் செல்வத்தை அவர் விட்டுச் சென்றிருந்தார்.

அடக்க ஆராதனையில் பேசப்பட்ட புகழுரைக்குப் பின்னர், கல்லறைக்கு புறப்பட்ட சோகமான பயணத்திற்குப் பின்பு, தாய் விட்டுப்போன சிறிய பொருட்களை வளர்ந்துவந்த குடும்பத்தினர் சோதனையிட்டனர்.

அவைகளுக்கு மத்தியில் ஒரு குறிப்பையும் ஒரு சாவியையும் லூயிஸ் கண்டுபிடித்தார்.

“படுக்கையறையின் மூலையிலுள்ள மரப்பெட்டியின் கீழ் அறையில் ஒரு சிறிய பெட்டியிருக்கிறது. எனது இருதயத்தின் பொக்கிஷம் அதிலிருக்கிறது. இந்த சாவியால் அந்தப் பெட்டியை திறக்கலாம்” என அந்தக் குறிப்பில் எழுதப்பட்டிருந்தது.

பூட்டு போட்டு சாவியை வைத்திருக்கிற அளவுக்கு தாயார் என்ன மதிப்புள்ளவற்றை வைத்திருப்பார் என அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

அந்த பெட்டி அது வைக்கப்பட்ட இடத்திலிருந்து எடுக்கப்பட்டு, சாவியின் உதவியால் கவனமாக திறக்கப்பட்டது. லூயிஸூம் மற்றவர்களும் பெட்டியிலிருந்தவற்றை ஆராய்ந்து பார்த்தபோது, பிள்ளைகளின் பெயர்களும், பிறந்த தேதிகளும் எழுதப்பட்ட ஒவ்வொரு பிள்ளைகளின் புகைப்படங்களையும் அவர்கள் கண்டார்கள். பின்னர் கையால் தயாரிக்கப்பட்ட ஒரு வாழ்த்து அட்டையை லூயிஸ் வெளியில் எடுத்தார்.

“அன்புள்ள அம்மா நான் உங்களை நேசிக்கிறேன்” என 60 ஆண்டுகளுக்கு முன்பு அவர் சிறுபிள்ளையின் கையெழுத்தில் எழுதியிருந்த வார்த்தைகளை அவர் படித்தார். இருதயங்கள் இழகி, குரல் கம்மி, கண்கள் நனைந்தன. தாயின் பொக்கிஷம் அவருடைய நித்திய குடும்பமே. “நான் உங்களை நேசிக்கிறேன்” என்ற உறுதியான அஸ்திபாரத்தின்மீதே அதன் பெலனிருந்தது.

இன்றைய உலகத்தில் வீட்டைவிட வேறு எங்கும் அந்த அன்பின் உறுதியான அஸ்திபாரம் தேவைப்படாது. தங்களின் குடும்ப வாழ்க்கையில் அன்பையே முக்கியமாக்கிய பிற்காலப் பரிசுத்தவான்களின் வீடுகளைவிட அந்த உறுதியான அஸ்திபாரத்தின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டை வேறு எங்கும் இந்த உலகம் காணமுடியாது. இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாயிருக்க ஏற்றுக்கொண்டவர்களாகிய நமக்கு அவர் இந்த செல்வாக்கான அறிவுரையை வழங்கியிருக்கிறார்.

“நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்ததைப்போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். “நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.”[1]

ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருக்க அந்த கட்டளையை நாம் கைக்கொண்டால், அன்றாட உறவுகளில் நாம் ஒருவருக்கொருவர் அன்பைக் காட்டி, இரக்கத்துடனும் மரியாதையுடனும் ஒருவரையொருவர் நடத்துவோம். ஒரு அன்பான வார்த்தையை, ஒரு பொறுமையான பதிலை, ஒரு புரிந்துகொள்ளுதலின் செவியை, ஒரு மன்னிப்பின் இருதயத்தை அன்பு வழங்குகிறது. நமது எல்லா உறவுகளிலும் இந்த, மற்றும் இத்தகைய செயல்கள், நமது இருதயங்களில் அன்பைக் காட்ட உதவுகிறது.

அன்பென்பது வானவில்லின் முடிவிலுள்ள தங்கப்பானை. இருந்தும் இது வானவில்லின் முடிவைவிட மேலானது. அன்பு ஆரம்பத்திலுமிருக்கிறது, அது ஒரு மழைக்காலத்தில் வானத்தினூடே அழகைப் பொழிகிறது. அன்புக்காக அழுகிற பிள்ளைகளுக்கு அது பாதுகாப்பு, வாலிபருக்கு ஏக்கம், திருமணத்தை ஒட்டவைக்கிற பசை, வீட்டில் ஏற்படும் பயங்கர பிரச்சினையை தடுக்கிற எண்ணெய், வயதானவர்களுக்கு அது சமாதானம், மரணத்தின் வழியே நம்பிக்கையின் சூரியஒளி.

குடும்பத்தினுடன், நண்பர்களுடன், சபை மற்றும் அண்டைவீட்டாருடன் அவர்களுடைய உறவில் அதை அனுபவிப்பவர்கள் எவ்வளவு பெரிய ஆஸ்திமான்கள்”[2] என தலைவர் கார்டன் பி.ஹிங்க்லி (1910-2008) கூறினார்.

அன்பு, சுவிசேஷத்தின் சாறாகவும் மனித ஆத்துமாவின் புனித எண்ணமாயுமிருக்கிறது. அன்பு, ஏழைக் குடும்பங்களுக்கு, நலிந்த சமுதாயங்களுக்கு, தாழ்ந்த நாடுகளுக்கு பரிகாரமாயிருக்கிறது, அன்பு, ஒரு புன்னகை, ஒரு அன்பான மதிப்புரை, ஒரு பாராட்டுதல். அன்பு, தியாகமாக, சேவையாக, தன்னலமற்றதாயிருக்கிறது.

கணவன்மார்களே உங்கள் மனைவிகளை நேசியுங்கள். மரியாதையுடனும் பாராட்டுதலுடனும் அவர்களை நடத்துங்கள்.

சகோதரிகளே, உங்கள் கணவன்மார்களை நேசியுங்கள். கண்ணியத்துடனும், ஊக்கத்துடனும் அவர்களை நடத்துங்கள்

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை நேசியுங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள், அவர்களுக்கு போதியுங்கள், அவர்களுக்கு சாட்சியாயிருங்கள்.

பிள்ளைகளே உங்கள் பெற்றோரை நேசியுங்கள். அவர்களுக்கு மரியாதையையும், நன்றியுணர்வையும், கீழ்ப்படிதலையும் காட்டுங்கள்.

கிறிஸ்துவின் தூய அன்பில்லாமல் "நாம் ஒன்றுமில்லை"[3] என மார்மன் கூறுகிறான்.

"அவருடைய குமாரனான இயேசு கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கிற யாவர்மேலும் அவர் அருளின இந்த அன்பினால் நாம் நிரப்பப்படவும், தேவனுடைய குமாரர்களாகவும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே இருக்கவும் பிதாவினிடத்தில் இருதயத்தின் ஊக்கத்தோடு ஜெபியுங்கள்"[4] என்ற மார்மனின் ஆலோசனையை நாம் பின்பற்றவேண்டுமென்பது எனது ஜெபம்.

**குறிப்புகள்**

1. யோவான் 13:34-35
2. Gordon B. Hinckley, "And the Greatest of These Is Love," *Ensign,* Mar. 1984,
3. மரோனி 7:46; வசனம் 44யும் பார்க்கவும்.
4. மரோனி 7:48.

---

## இந்த செய்தியிலிருந்து போதனை

கிறிஸ்துவைப்போன்ற உண்மையான அன்பை, குறிப்பாக வீட்டில் காட்டுவதின் முக்கியத்துவத்தைப்பற்றி தலைவர் மான்சன் நமக்குப் போதிக்கிறார். அவர்கள் எப்படி ஒருவருக்கொருவர் அதிக அன்பைக் காட்டமுடியுமென்பதை ஒரு குடும்பமாக ஒன்றுகூடி விவாதிக்க, நீங்கள் விசாரிப்பவர்களைக் கேட்க கருத்தில் கொள்ளவும். ஒரு குடும்பமாக அந்த கருத்துக்களில் ஒன்றை தெரிந்தெடுத்து அதை அடைய திட்டங்களை வகுக்க நீங்கள் அவர்களை ஊக்குவிக்கலாம். உதாரணமாக, ஒவ்வொரு வாரமும் குடும்ப அங்கத்தினர்கள், மற்றொரு குடும்பத்திற்கு ஒரு இரகசிய சேவையின் செயலை வழங்க நாடலாம். தங்களுடைய இலக்குகளை அடைய முயற்சித்தல் எவ்வாறு தங்கள் வீட்டிலுள்ள அன்பை அதிகரிக்க வைத்ததென்பதை கூரும்படி பின்னர் நீங்கள் அவர்களைக் கேட்கலாம்.

# வாலிபர்

## சமாதானத்திற்காக ஜெபித்தல்

சாரா.டி

சபை முடிந்த பின்பு வழக்கமாக எனது பெற்றோர் கூட்டங்களில் பங்கேற்பார்கள். அப்போது நான் என்னுடைய இளைய சகோதரர்களை, அவர்கள் கோபப்பட்டாலும், பசியாயிருந்தாலும் கண்காணித்து வந்தேன். வழக்கமாக அவர்கள் சண்டைபோட ஆரம்பித்தால் சிறிய பிரச்சினைகளை விரைவிலேயே நான் தீர்த்துவிடுவேன். ஆனால் சிலநேரங்களில் ஒருமுறை சண்டை ஆரம்பித்து நான் எதிர்த்தால் சமாதானமடைவது மிகக்கடினம்.

ஒரு மத்தியான வேளையில் என்னுடைய சகோதரர்களுக்கிடையில், குறிப்பாக ஒரு பிரச்சினை எழுந்தது. நான் கோபமாயிருந்ததால், சமாதானம் செய்ய என்னுடைய முயற்சிகள் காரியங்களைக் கெடுத்ததென்பதை நான் கண்டுபிடித்தேன். ஆகவே நான் என் உணவை நான் தயாரித்து பேசுவதை நிறுத்திக்கொண்டேன். இறுதியாக, "நான் ஜெபிக்கப்போகிறேன்.

ஒரு நிமிடம் நாம் அமைதியாயிருப்போமா?" என அறிவித்தேன்.

அவர்கள் அமைதியான பின்பு உணவை ஆசீர்வதிக்க நான் ஜெபித்தேன். ஜெபத்தை முடிப்பதற்கு முன்னர், "நாங்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருக்க தயவுசெய்து எங்களுக்குதவும்" என நான் சேர்த்துக்கொண்டேன்.

முதலில் அவர்கள் கேட்டதாகத் தோன்றாமல் மீண்டும் சண்டைபோட ஆரம்பித்தார்கள். நான் எரிச்சலடைந்தேன் ஆனால் இப்போதுதான் நான் சமாதானத்திற்காக ஜெபித்திருந்ததால் நான் அன்பாகவும் அமைதியாகவுமிருக்கவேண்டும் என்பதை அறிந்திருந்தேன். ஒரு நிமிடத்திற்குப் பின்னர் நான் மிக அமைதியை உணர்ந்தேன். எதுவுமே சொல்லாமல் நான் சாப்பிட்டேன், சகோதரர்களும் சண்டைபோடுவதை நிறுத்தினர். நான் உணர்ந்த சமாதானம் ஒரு எளிய ஜெபத்திற்கான பதில் என்பதை நான் உணர்ந்தேன்.

சமாதானம்பண்ணுகிறவளாயிருக்க நான் ஜெபித்தேன், நான் சத்தம்போடுவதற்கு சோதிக்கப்பட்டபோது அமைதியாயிருக்க என்னுடைய பரலோக பிதா எனக்கு உதவினார். உண்மையாகவே சமாதானத்தை அவரால் கொடுக்கமுடியும் என்பதை நான் அறிந்தேன்.

*ஆசிரியர் அ.ஐ.நாடுகளின் அரிசோனாவில் வசிக்கிறார்*

## பிள்ளைகள்

### உண்மையான பொக்கிஷம்

ஒரு விசேஷமான பொக்கிஷப்பெட்டியை வைத்திருந்த ஒரு தாயின் கதையைப்பற்றி தலைவர் மான்சன் கூருகிறார்.

அவருடைய பிள்ளைகள் பெட்டியை திறந்தபோது அவர்களுடைய புகைப்படங்களை அவர்கள் கண்டார்கள். தாயின் பொக்கிஷம் அவருடைய குடும்பமே! உண்மையான பொக்கிஷம் பொன்னோ அணிகலன்களோ அல்ல, அது நீங்கள் நேசிக்கிற மக்களே. நீங்கள் யாரை நேசிக்கிறீர்கள்?

அவர்களுடைய படங்கள் அல்லது அவர்களுடைய பெயர்கள் பெட்டியின் உள் இருக்கிற ஒரு பொக்கிஷப்பெட்டியை வரையவும்.

©2017 by Intellectual Reserve, Inc. அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாவில் அச்சடிக்கப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/16 மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/16 First Presidency Message, February 2017. மொழிபெயர்ப்பு. TAMIL. 97922 418

# கிறிஸ்துவின் பாவநிவர்த்தி தேவனின் அன்புக்கு நிருபணம்

எதைப் பகிர்ந்து கொள்ளுவதென்பதை அறிந்துகொள்ள இந்த உரையை ஜெபத்துடன் படித்து உணர்த்துதலுக்காக நாடவும்.

விசுவாசம், குடும்பம், ஒத்தாசை

நித்திய ஜீவனுக்காக அழியாமையும் திறனும் நமக்கிருப்பதற்காக நமது பரலோக பிதா தன்னுடைய ஒரே பேறான குமாரனை தந்தருளினார் என்பதை புரிந்துகொள்ளுதல், நம்மீது வைத்துள்ள தேவனுடைய அளவில்லா, புரிந்துகொள்ளமுடியாத அன்பை உணர நமக்குதவுகிறது.

நம் இரட்சகரும் நம்மை நேசிக்கிறார்.

“கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?...

“மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,

“உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்” (ரோமர் 8:35, 38-39).

“கெத்சமெனேயில் இரட்சகரின் பாடுகளும் சிலுவையில் அவருடைய வியாகுலமும் நம்மீது நியாயம் கேட்கிறதை திருப்திப்படுத்துவதில் பாவத்திலிருந்து நம்மை மீட்கிறது” என இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியைக் குறித்து, பன்னிருவர் அப்போஸ்தலர் குழுமத்தின் மூப்பர் டி.டாட் கிறிஸ்டோபர்சன் சொன்னார்.

மனந்திரும்புவர்களுக்கு அவர் இரக்கத்தையும் மன்னிப்பையும் வழங்குகிறார்.

நம்மீது வைக்கப்பட்டுள்ள நீதியின் கடனை குணமாக்குதலாலும், நாம் குற்றமற்றவர்களாக நிலைத்திருக்கிற எந்த பாடுகளையும் ஈடுசெய்யவும், இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியும்கூட திருப்தியாக்குகிறது.

‘இதோ, அவர் எல்லா மனுஷருடைய வேதனைகளையும், ஆம் ஆதாமின் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஜீவராசியின் வேதனைகளையும், புருஷர்க்ள், ஸ்திரீகள், குழந்தைகளுமான அனைவருடைய வேதனைகளையும் சகித்திருக்கிறார்).’ (2நேபி 9:21; ஆல்மா 7:11-12ஐயும் பார்க்கவும்).”[1]

கிறிஸ்து [அவருடைய] “உள்ளங்கைகளில் [நம்மை]

வரைந்திருகிறார்” (ஏசாயா 49:16).

“நமது பாவங்களுக்காவும், நமது மனவேதனைகளுக்காகவும், நமது தனிப்பட்ட வாழ்க்கையில் எல்லாமுமே தவறாகத் தோன்றுகிறவற்றிற்காகவும், தம்முடைய ஒரே பேறான, பரிபூரணமான குமாரனை அவர் அனுப்பி நம்மை இவ்வளவாய் நேசிப்பதற்காகவும், அந்த மேன்மையான அன்பின் செயல் நமது பரலோக பிதாவுக்கு நன்றி செலுத்த நம் ஒவ்வொருவரையும் தாழ்மையான ஜெபத்தில் முழங்கால்படியிட வைக்கிறது”[2] என ஒத்தாசைச் சங்க பொதுத் தலைவர் லின்டா கே.பர்ட்டன் சொல்கிறார்.

## கூடுதலான வேத வசனங்களும் தகவலும்

யோவான் 3:16; 2நேபி 2:6-7,9; reliefsociety.lds.org

### குறிப்புகள்

1. D. Todd Christofferson, “Redemption,” *Liahona,* May 2013, 110
2. Linda K. Burton, “Is Faith in the Atonement of Jesus Christ Written in Our Hearts?” லியஹோனா, நவம்பர் 2012, 114

## இதைக் கருத்தில் கொள்ளவும்

நமது இரட்சகரின் பாவநிவர்த்தியின் வரத்திற்காக தேவனுக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் நமது நன்றியையும் அன்பையும் நாம் எவ்வாறு வெளிப்படுத்துவோம்?

©2017 by Intellectual Reserve, Inc. அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.அ.ஐ.நாவில் அச்சடிக்கப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/16 மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/16 Visiting Teaching Message, February 2017 மொழிபெயர்ப்பு. TAMIL. 97922 418